Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 06 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 18 (02 07 - 1991) செவ்வாய்க்கிழமை ஓசை: 134

## வடபகுதி நோயாளா தெற்கில் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

விசேட சிகிச்சைக்காக கொழும்பு கொண்டு செல்லப்படும் நோயாளர்கள் மருத்துவ புறக்கணிப்புக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர் வடபகுதியிலிருந்து விசேட சிகிச்சைக்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டின் பேரில் கப்பல் மூலம் நோயாளர்கள் கொண்டு செலப்படுவது தெரிந்ததே இந் நோயாளர்கள் கொழும்பு (6ஆம் பக்கம் பார்க்க)

பிரித்தானியத் தூதுவர் கிளஸ்ரோன் விவகாரத்தில்

# சிறிலங்காவின் செயல் ஏற்புடையதல்ல

## ஐ. பொருளாதாரச் சமூகம் அறிவிப்பு

(லண்டன்)

சிறிலங்காவுக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர் டேவிற் கிளாஸ்ரோன் வெளியேற்றப்பட்டது ஏற்புடைய செயல் அல்ல என்று ஐரோப்பிய பொருளாதார சமூகம வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறை கூறியுள்ளது.

சிறிலங்காவில் மே மாதத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது தூதுவருக்குரிய அதிகாரங்களை மீறி சிறிலங்காவின் உள்விவகாரங்களில் தலையிட்டார் என்று காரணம் காட்டி நாட்டை விட்டு வெளியேற்றியமை தெரிந்ததே. இது விடயமாகவே ஐரோப்பியப் (6 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிபதிவீட்டருகில் குண்டுவெடிப்பு

(மாத்தறை)

மாத்தறை கடற்கரை வீதியில் நீதிபதி ஒருவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்கு அருகில் குண்டொன்று வெடித்தது. இதனால் எல்லைச் சுவர் சாய்ந்தது இச்சம்பவம் நடந்த (6 ம் பக்கம் பார்க்க)

## முல்லையில் இராணுவ முயற்சி முறியடிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் பொதுமக்களின் வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தியவாறு முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் புலிகளின் எதிர்த் தாக்குதலால் பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தின (6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் நேற்று பலமான குண்டுவீச்சு

(கிளிநொச்சி)

ஆனையிறவு இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் நேற்று முந்தினம் காலையிலும், மாலையிலும் உக்கிரமான விமானத் தாக்குதலும், ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவருகிறது

நேற்றுக் காலை ஒன்பது மணியில் இருந்து ஒன்பதே முக்கால் மணிவரை சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த இர (6 ஆம் பக்கம் பார்க்க)

## இளைப்பாறிய ஆசிரியருக்கு செயலகத்தில் ஒய்வூதியம்

(நல்லூர்)

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 44/90ன் கீழ் சுய விருப்பில் இளைப்பாறியுள்ள ஆசிரியர், மற்றும் யாழ் கல்வித்திணைக்கள ஊழியர்களின் தற்காலிக ஓய்வூதியம் யாவும் இனிமேல் யாழ். செயலக ஓய்வூதியக் கிளை மூலமே வழங்கப்படவேண்டும் என பொது நிர்வாக அமைச்சு யாழ். கல்வித் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளது.

இதுவரை சுய விருப்பத்தின் பேரில் ஓய்வுபெற்றவர்களிடமிருந்து சத்தியக் கடதாசியைப் பெற்று கொழும்பிலுள்ள ஓய்வூதியப் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்கள ஓய்வூதிய வட்டாரங்கள் தெரி (6ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய - சிறிலங்கா உறவு குண்டுவெடிப்பால் நெருக்கம்?

(லண்டன்)

சென்னையிலும் அதைத் தொடர்ந்து டில்லி சர்வதேச விமான நிலையத்திலும் ஏற்பட்ட குண்டு வெடிப்புகள் இந்தியா சிறிலங்கா உறவைப் பலப்படுத்தலாமென பி.பி.ஸி தனது செய்தி விமர்சனத்தில் குறிப்பிட்டுள்ளது.

மேலும் அச்செய்தி விமர்சனத்தில் தமிழ் நாட்டின் புதிய முதல்வராகப் பதவி ஏற்றுள்ள செல்வி ஜெயலலிதா விடுதலைப்புலிகளுக்கு எதிராக எடுத்துவரும் நடவடிக்கைகள் தொடர்பாக சிறிலங்கா அவதானத்துடனும், அக்கறையுடனும் கவனித்து வருவதாகவும் தெரிவித்தது

மேலும் குண்டு வெடிப்புகள் அதிகரித்துள்ளமையால் கொழும்பில் நடைபெறவுள்ள சார்க் மாநாட்டில் தென்னாசியாவில் தீவிரவாதம்தொடர்பான விடயம் நிச்சயம் நிரலில் இடம் பெறலாம் எனவும் பி.பி.ஸி. தெரிவித்தது.

## இன்று கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

'இஸ்ரேல் - பலஸ்தீனம் பிரச்சினை வளைகுடா யுத்தத்தின் பின் உள்ள நிலைமை' குறித்த கருத்தரங்கு ஒன்று யாழ் பல்கலைக்கழக புவியியற் கழகத்தினால் இன்று நடாத்தப்படவுள்ளது.

இந்தக் கருத்தரங்கினை புவி (6ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணன் கொள்ளைக் குழு சில புதிய தகவல்கள்

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ள பிரபல கொள்ளைக் குழுவினர் பற்றியும், அதன் தலைவர் கண்ணனைப் பற்றியும் செய்திகள் வெளிவரத்தொடங்கியுள்ளன.

கொள்ளைச் சம்பவம் ஒன்றின் பெயரால் இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட கண்ணன் இந்திய இராணுவத் தடுப்பு முகாமில் இருக்கும்போது அம்முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏனையோரையும், விடுதலையாகி வந்தவுடன் இவரது சொந்த இடமாகிய சுழிபுரம் மற்றும் சித்தன்கேணி பகுதியில் உள்ளவர்களையும் தான் விடுதலைப் புலிகள் இயக்க அங்கத்தவரே என நம்ப (6ஆம் பக்கம் பார்க்க)

## சின்னமடு முகாமிலிருந்து எறிகணைத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறையில் உள்ள சின்னமடுவில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவத்தின் காவலரணில் இருந்து கடந்த சனியிரவு 50 கலிபர் தாக்குதலும் அதனைத் தொடர்ந்து புளியங்கூடல் சந்தியைநோக்கி ஏராளமான எறிகணைத் தாக்குதலும் மேற்கொள்ளப் பட்டது.

இதேதினம் இரவு 11-20 மணியளவில் மேற்படி காவலரணை நோக்கி விடுதலைப் புலிகள் அருகே 89 தாக்குதலை மேற்கொண்டனர். இத் தாக்குதல்களால் ஏற்பட்ட சேத விபரங்கள் கிடைக்கவில்லை.

## உள்ளூராட்சி சபைகளை குடியரசாக்க யோசனை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களை குடியரசாக மாற்ற யோசனை மேற்கொள்ளப்படுவதாக சிறிலங்கா ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

கம்புறுப்பிட்டியில் இடம்பெற்ற சப் உதாவ கண்காட்சி வைபவங்கள் பலவற்றில் கலந்து கொண்டு பேசிய பிரேமதாசா இலங்கையின் நிர்வாகத் துறையில் உள்ளூராட்சி மன்றங்கள் முக்கிய இடம் வகிப்பதனால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு பரிபாலனத் துறையிலே முக்கிய இடம் அளித்துள்ளோம் என்றும், எமது ஆட்சிக்காலத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் ஒவ்வொன்றையும் குடியரசுகளாக மாற்ற ஆலோசித்துவருகிறோம் என்றும் தெரிவித்தார்

## சாதனை படைக்கும் தமிழக சட்டசபை

(சென்னை)

தமிழக பத்தாவது சட்டப் பேரவையில் முதலாவது கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது பலத்த பாதுகாப்பு மத்தியில் ஆரம்பித்த இந்தக் கூட்டத்தொடரில் பேரவையின் தலைவர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் உறுப்பினர்களுக்கு பதவிப் பிரமாணத்தைச் செய்து வைத்தார்.

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவை அடுத்து இரா. நெடுஞ்செழியன் பதவிப் பிரமாணம் ஏற்றார் கல்வி அமைச்சர் ஆர். எம். வீரப்பன் சட்டப் பேரவை உறுப்பினர் இல்லை எனவே அவர்மாத்திரம் பதவி ஏற்கவில்லை. எல்லாமாக மொத்தம் 16 அமைச்சர்கள் பதவி ஏற்றனர்

இந்தப் பேரவை இந்திய தேர்தல் வரலாற்றிலேயே சாதனையைப் படைத்திருக்கும் பேரவையாகும். இந்தப் பேரவைக்கு வழங்கப்பட்ட காதுகாப்புப்போல் முன் எப்போதும் முன்னைய அவைகளுக்கு வழங்கப்படவில்லை அத்துடன் பலவீன நிலைக்குத் (6ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்வரும் 24 முதல் யாழ் நகரில் கம்பன் விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் இவ்வாண்டுக்கான "கம்பன் விழா" இம் மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரையிலான ஐந்து நாட்களும் நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனக் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

மேற்படி விழாவில் பட்டிமன்றம், இசையரங்கு, நாடக அரங்கு போன்ற பலநிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

## வீரவணக்கம்

### சிவானந்தன்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவத்தினருடன் நேற்றைய தினம் ஏற்பட்ட மோதலின் போது வீரவேங்கை சிவானந்தன் (நடராஜா நகுலேஸ்வரன், இல 208, ஜெயந்திநகர், கிளிநொச்சி) என்பவர் வீரமரணமடைந்துள்ளார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## நான் வணங்கும் குலதெய்வம் ஜெயலலிதா மீது ஆணையாக...

(சென்னை)

தமிழ் நாடு சட்டப்பேரவையில் நேற்று பதவி பிரமாணம் எடுத்துக் கொண்ட நிகழ்வின் போது உறுப்பினர் ஒருவர் நான் வணங்கும் குலதெய்வம் செல்வி ஜெயலலிதா (6ஆம் பக்கம் பார்க்க)

விளம்பரம்

**அன்பளிப்பு**

மில்க்வைற் சவர்க்காரத்துடன் 50 கிறாம் வெற்றுப் பக்கற் நூறு கொடுத்து ஒரு அழகிய கைலேஞ்சியை அன்பளிப்பாகப் பெறுவீர்கள்.

50 கிறாம் பக்கற் ஒன்று ரூபா 6/- மட்டுமே மில்க் வைற் யாழ்ப்பாணம்.

(B/2750)

**தவறிவிட்டது**

23. 06. 1991 ஞாயிறு கச் சாய்வீதிக்கும் கண்டிவீதி மிருசுவிலுக்கும் இடையில் சிறு தொகைப்பணம் தவறிவிட்டது தயவுசெய்து இதனைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

ப. அருளப்பு

(B-2761)

# பதுளை தமிழ் வித்தியாலய மாணவர்கள் திடீர் சுகயீனம்

(பதுளை)

பதுளை ஸ்பிரிங்வெலி தமிழ் வித்தியாலய மாணவர்கள் பத்துப் பேர் பாடசாலை நேரத்தில் திடீர் சுகயீனமுற்று பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பாடசாலை வளவில் உள்ள காய்கறித் தோட்டத்திற்கு தெளித்த கிருமி நாசினி மருந்து மாணவர்களுக்கான குடிநீர் தொட்டியில் கலந்ததால் குடிநீர் விஷமாகியதே மேற்படி சம்பவத்திற்கு காரணம் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பாடசாலை வளவில் உள்ள குடிநீர் தொட்டிக்கு அருகில் காய்கறித் தோட்டம் உண்டு என அப்பாடசாலையில் படிப்பிக்கும் ஆசிரியர்கள் தெரிவித்தனர். ஆனால் தண்ணீர்த் தொட்டிக்கு அருகில் காய்கறித் தோட்டம் இல்லை என வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவ, மாணவிகள் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி மாணவர்கள் அனைவரும் பாடசாலைக்கு அருகிலுள்ள தண்ணீர் தாங்கியின் நீரை அருந்திய பின்னரே திடீர் சுகயீனத்திற்குள்ளாகியதாகவும் கூறப்படுகின்றது.

## அலங்கார உற்சவம்

(கொழும்புத்துறை)

யாழ் ஈச்சமோட்டை - கலட்டிப்புலம் அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 26 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை 12 தினங்கள் தொடர்ந்து நடைபெற உள்ளன.

## கும்பாபிஷேகம்

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு பன்றித் தலைச்சி கண்ணகை அம்பாள் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. மாலை 5 மணிக்கு விசேட பூஜையும், திருவூஞ்சல், திருவீதியுலா பவனி, முதலியன நடைபெறவுள்ளன. (24)

## ஐ. நா. தீர்மானங்களை ஈராக் நிறைவேற்றினால் தடை அகற்றப்படும்

(லக்சம்பேர்க்)

வளைகுடாப் போரின் போது ஐ. நா. பாதுகாப்புச்சபை இயற்றிய தீர்மானங்கள் அனைத்தையும் ஈராக் செயல்படுத்தினால் மட்டுமே ஈராக் மீதான தடை நடவடிக்கைகள் அகற்றப்படும் என்று ஐரோப்பிய சமூகம் தெரிவித்துள்ளது.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களை ஈராக் ஏற்காத வரை ஈராக் மீதான தடைகள் நீக்கப்படுவது பற்றி ஈராக் நம்பிக்கை வைக்கக் கூடாது என்றும் அச் சமூக நாடுகள் தெரிவித்துள்ளன.

ஐரோப்பிய சமூகத்தின் லக்சம்பேர்க் உச்சி மாநாட்டின் முடிவில் விடப்பட்ட அறிக்கையொன்றில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அணு ஆயுத வசதிகளை மறைப்பதற்கான ஈராக்கின் முயற்சிகளையும் இந்த நாடுகள் கண்டனம் செய்தன.

## அறிவித்தல்

### வட-பிராந்திய சுருட்டு தொழிலாளர் சங்கம்

மாவீரர்கள் நினைவாக நடாத்தும் உதை பந்தாட்டப் போட்டி

✲ 7 பேர் கொண்ட அணிக்கான போட்டி ✲

இப்போட்டியில் பங்கு பற்றும் அணிகளில் தோல்வி அடையும் அணி விலக்கப்படும். வெற்றிபெறும் 1 ஆவது அணிக்கு மேஜர் சுதுளியின் ஞாபகார்த்தமாகப் பரிசு வழங்கப்படும். 2 ஆவது அணிக்கு லெப்டினன் சைமனின் ஞாபகார்த்தமாகப் பரிசு வழங்கப்படும். 3 ஆவது அணிக்கு வீரவேங்கை மாலியின் ஞாபகார்த்தமாகப் பரிசு வழங்கப்படும். சிறந்த விளையாட்டு வீரனுக்கான பரிசு மாஸ்டர் செல்வராசாவின் (அன்பு) ஞாபகார்த்தமாக வழங்கப்படும். சிறந்த பந்து காப்பாளனுக்கான பரிசு லெப்டினன் முகுந்தனின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும். வெற்றி பெறும் அணியின் வீரர்களுக்கான பரிசுகள் முறையே-

(1) கப்டன் பாரத் (2) 2 ஆவது லெப்டினன் காந்தி

(3) கிறிஷ்ரி (4) பத்மபிரியா

(5) லெப்டினன் சுரேஸ் (6) இன்பம்

ஏனைய பரிசில்கள் மாவீரர் நினைவாக வழங்கப்படும்.

போட்டி விண்ணப்ப முடிவு திகதி 5-7-91.

## தமிழக சட்டப் பேரவையின் முதலாவது கூட்டத் தொடர்

(சென்னை)

தமிழக சட்டப் பேரவையின் முதலாவது கூட்டத் தொடர் நேற்றுக் காலை தொடங்கியது.

முதலாம் நாளாகிய நேற்று சட்டப்பேரவை உறுப்பினர்கள் தமது பதவியை ஏற்றுக் கொண்டனர். சட்டப்பேரவையின் மூத்த உறுப்பினரும் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவருமான திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் தற்காலிக பேரவைத் தலைவராக இருந்து உறுப்பினர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

சட்டப் பேரவைத் தலைவராக திருமதி ஏ. எஸ். பொன்னம்மாளை மாநில ஆளுநர் பீஷ்ம நாராயணசிங் கடந்த வாரம் நியமித்தார்.

## தமிழ் அறிவுப் போட்டி

இருபாலை தமிழ் மாமன்றம் யாழ். மாவட்டத்தில் உள்ள சனசமூக நிலையங்களுக்கிடையில் தமிழ் அறிவுப் போட்டியொன்றை நடாத்துவது என அண்மையில் நடைபெற்ற ஆட்சிக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட ரீதியில் நடைபெறவுள்ள தமிழ் அறி

## ஓய்வூதியக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு ஓய்வூதியர் சங்கத்தின் அவசர பொதுக் கூட்டம் ஒன்று வரும் ஞாயிற்றுக்கிழமை 7ஆம் திகதி காலை 9-30 மணிக்கு மல்லாகம் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெறும். வலி வடக்கிலுள்ள ஓய்வூதியர் உலர் உணவு உள்ளிட்ட சகல பிரச்சினைகளும் ஆராயப்படும் என்பதால் சகல ஓய்வூதியர்களும் தவறாது பங்கு பற்றித் தங்கள் கருத்துக்களைப் பரிமாறி ஒத்துழைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## சங்காபிஷேகமும் திருவிழாவும்

(யாழ்ப்பாணம்)

அரியாலை மணியந்தோட்டம் ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த மகா சங்காபிஷேகமும் திருவிழாவும் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமானது. தேவியின் திருவீதி உலாவும் இடம் பெற்றது. திருமுறை மன்றத்தாரது பஜனை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

யும் அணி விலக்கப்படும். வெற்றிபெறும் 1 ஆவது அணிக்கு மேஜர் கருளியின் ஞாபகார்த்தமாகப் பரிசு வழங்கப்படும். 2 ஆவது அணிக்கு லெப்டினன் சைமனின் ஞாபகார்த்தமாகப் பரிசு வழங்கப்படும். 3 ஆவது அணிக்கு வீரவேங்கை மாவியின் ஞாபகார்த்தமாகப் பரிசு வழங்கப்படும். சிறந்த விளையாட்டு வீரனுக்கான பரிசு மாஸ்டர் செல்வராசாவின் (அன்பு) ஞாபகார்த்தமாக வழங்கப்படும். சிறந்த பந்து காப்பாளருக்கான பரிசு லெப்டினன் முகுந்தனின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும். வெற்றி பெறும் அணியின் வீரர்களுக்கான பரிசுகள் முறையே-

(1) கப்டன் பாரத் (2) 2 ஆவது லெப்டினன் காந்தி
(3) கிறிஷ்ரி (4) பத்மபிரியா
(5) லெப்டினன் சுரேஸ் (6) இன்பம்

ஏனைய பரிசில்கள் மாவீரர் நினைவாக வழங்கப்படும்.

போட்டி விண்ணப்ப முடிவு திகதி 5-7-91. போட்டி விதிகள் விண்ணப்பம் பெறவருபவர்களிடம் ஒப்படைக்கப்படும்.

விண்ணப்பக் கட்டணம் 50/-

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
திரு. செல்லையா உருத்திரா
தலைவர், வடபிராந்திய சுருட்டுத்தொழிலாளர் சங்கம்
71, கே. கே. எஸ் வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.
(B/ 2760)

நாட்டின் முடிவின் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.
அணு ஆயுத வசதிகளை

## தமிழ் அறிவுப் போட்டி

இருபாலை தமிழ் மாமன்றம் யாழ். மாவட்டத்தில் உள்ள சனசமூக நிலையங்களுக்கிடையில் தமிழ் அறிவுப் போட்டிகளை நடாத்துவது என அண்மையில் நடைபெற்ற ஆட்சிக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட ரீதியில் நடைபெறவுள்ள தமிழ் அறிவுப் போட்டிகள் விபரம் பின்வருமாறு: பேச்சு, கவிதை, சிறுகதை, திருக்குறள், கட்டுரை, தனிநடிப்பு, குழுப் பாடல், சங்கீதம் நடனம், தமிழ் அறிவுப் போட்டிகள் ஆகிய 10 நிகழ்ச்சிகள் நடாத்த இருப்பதாகத் தமிழவைத் தலைவர் கவிஞர் இருபாலை திரு. க. ஜீவமோகன் எமது நிருபருக்குத் தெரிவித்துள்ளார். (24)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு ஓய்வூதியர் சங்கத்தின் அவசர பொதுக் கூட்டம் ஒன்று வரும் ஞாயிற்றுக்கிழமை 7ஆம் திகதி காலை 9-30 மணிக்கு மல்லாகம் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெறும். வலி வடக்கிலுள்ள ஓய்வூதியரின் உலர் உணவு உட்பட்ட சகல பிரச்சினைகளும் ஆராயப்படும் என்பதால் சகல ஓய்வூதியர்களும் தவறாது பங்குபற்றித் தங்கள் கருத்துக்களைப் பரிமாறி ஒத்துழைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

...வம்மாளை மநில ஆளுநர் பீஷ்ம நாராயணசிங் கடந்த வருடம் நியமித்தார்.

## சங்காபிஷேகமும் திருவிழாவும்

(யாழ்ப்பாணம்)

அரியாலை மணியந்தோட்டம் ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த மகா சங்காபிஷேகமும் திருவிழாவும் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமானது. தேவியின் திருவீதி உலாவும் இடம் பெற்றது. இரு முறை மன்றத்தாரது பஜனை நிகழ்ச்சியும் நடைபெற்றது.


ஆதிக்கக் கோட்டையின் அத்திவாரம்
மோதித் தகர்த்தது புலிகளின் வீரம்
விந்தையாகிய வெற்றியின் சின்னம்
சிந்தையில் என்றும் நிலைக்க வேண்டிய
கோட்டைக் கற்களை பெற்றுக் கொள்ளவும்

உங்களுக்குத் தேவையான

- ★ கறுப்பு வெள்ளை படங்கள்
- ★ கலர்படச் சுருள்கள்
- ★ அல்பங்கள்
- ★ போட்டோஸ்டற் பிரதிகள்

போன்றவற்றையும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

# இளந்தென்றல்

படப்பிடிப்பாளர்

இல. 14, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(B/2765)


# நினைவு கூருகின்றோம்...

## 1991 - 07 - 02

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரமரணமெய்திய
**குமாரதாஸ்** (கந்தையா குமாரதாஸ் - கண்டாவளை)

1988ஆம் ஆண்டு வன்னேரிக்குளத்தில் இந்தியப் படையினருடனான மோதலின்போது சயனைற் உட்கொண்டு வீரமரணமெய்திய
**சமுத்திரன்** (இராமநாதன் மனோகரராசா - வன்னேரிக்குளம்)

1989 ஆம் ஆண்டு வீரமரணமெய்திய
**சுதா** (சீ. ஜெயக்குமார் - யாழ்ப்பாணம்)

வவுனியா தோணிக்கல் பகுதியில் இந்திய இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலில் உயிரிழந்த தமிழ்ப்பெண்

1990 ஆம் ஆண்டு காரைநகரில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
**பரணி** (இரத்தினம் சுரேந்திரன் - காரைநகர்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B. 2762)

# இந்தியாவின் இன்றைய நெருக்கடிகள்

இன்றைய நிலையில் இந்தியா எதிர்நோக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் நெருக்கடிகளை விளக்க முற்படுவது அவசியமாகிறது. உள்நாட்டு அரசியலில் மூன்று முக்கிய விடயங்களை கருத்திற் கொள்ளலாம்.

1 பொருளாதாரப் பிரச்சினை.

2 பிரிந்து செல்வதற்கான அல்லது கூடிய உரிமைக்கான போராட்டங்கள் வளர்ந்துள்ளமை.

3. தலைமைத்துவப் பிரச்சினை.

வெளிநாட்டு ரீதியான பிரச்சினைகளை நோக்குமிடத்து 1, மாறி உள்ள புதிய உலக அரசியல் சூழலுக்கேற்ப இந்தியாவுக்கேற்ற வெளிநாட்டுக் கொள்கையை வகுத்தல்.

2, அண்டை நாடுகளுடனான பிரச்சினை. இதில் சீனா, பங்களாதேஷ், பாகிஸ்தான், நேபாளம், இலங்கை என்பன அடங்குகின்ற போதிலும் அதிக அக்கறைக்குரிய பிரச்சினைகள் இலங்கையும், பாகிஸ்தானுமாகும்.

பொருளாதாரத்தை எடுத்துக் கொள்வோமானால் நாட்டில் அந்நிய செலாவணிப் பற்றாக்குறைப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது ஒரு டாலரின் பெறுமானம் 20 ரூபாவிலிருந்து 30 ரூபாவாக மாறியுள்ளது. கள்ளக் கடத்தல் போன்ற விவகாரங்களினால் கைப்பற்றப்பட்டு சேமிக்கப்பட்ட 20 தொன் தங்கத்தை அரசு விற்பனை செய்துள்ளது. இது வழக்கமாக நடைபெறுப ஒன்றல்ல. இது அரசின் வங்குரோத்து நிலையைத்தான் காட்டி நிற்கிறது.

அந்நிய செலாவணிப் பிரச்சினையால் மாருதி (கார்) கொம்பனி மூடப்பட்டுள்ளது. மாருதிக் கொம்பனிக்குத் தேவையான உபகரணங்களை வழங்கிக் கொண்டிருந்த பல்வேறு கொம்பனிகளும் மூடப்பட்டுள்ளன. இந் நிலையில் இதனுடன் சேர்ந்து வேறுபல பொருளாதாரப் பிரச்சினைகளும் கூட்டுச் சேர்ந்துள்ளன, இவ்வாறான சூழலில் தான் நரசிம்ம ராவ் அரசாங்கம் பதவிக்கு வந்துள்ளது.

பதவிக்கு வந்த நரசிம்மராவ் பதவியேற்றதும் நாட்டு மக்களுக்காற்றிய தனது முதலாவது உரையில் முகம் கொடுக்கவேண்டிய, முகம் கொடுக்கப் போகின்ற பிரச்சினை பொருளாதாரப் பிரச்சினை என்றும் அதைத்தான் தீர்த்து வைக்கப் போவதாகவும் குறிப்பிட்டு உள்நாட்டு மக்களை அதற்காகத் தியாகம் செய்யுமாறும் அழைத்தார்.

இப்படி தியாகம் பற்றி அவர் விடுத்த அழைப்பு பொருளாதார பிரச்சினையின் உச்சக் கட்டத்தைக் காட்டி நிற்கிறது எனலாம். இதன் பொருட்டு பொருளாதாரத் துறையில் நிபுணத்துவம் வாய்ந்த மன்மோகன் சிங் என்பவரை நிதி அமைச்சராக நியமித்துள்ளார்.

இப் பெரிய இந்திய நாட்டிற்கு வெளிநாட்டு நிதி உதவி என்பது யானைப்பசிக்கு இருங்குப்பொரி என்பதேயாகும். உண்மையில் இதனை நிவர்த்தி செய்ய வேண்டுமானால் அந்நிய சக்திகளுக்கு பெரிதும் வளைந்து கொடுக்கவேண்டிய வெளியுறவுக் கொள்கையை வகுக்க வேண்டி ஏற்படும்.

மேலும் அந்நிய முதலீட்டைக் கவர்ந்த முக்கியமான பெரும் விட்டுக்கொடுப்புகளை அந்நிய சக்திகளுக்கு செய்ய வேண்டி ஏற்படும். விரும்பியோ, விரும்பாமலோ இதைத் தவிர வேறு வழியிருக்காது.

மன்மோகன் சிங் நிதியமைச்சராகப் பதவியேற்றதும் நடாத்திய முதலாவது பத்திரிகையாளர் மாநாட்டில் நாடு எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினையின் அபாயகரத்தை விளக்கினார்.

1, பற்றுமதிக்கும், இறக்குமதிக்குமிடையிலுள்ள சமமின்மையைப் பற்றி பெரிதும் கவலை தெரிவித்தார். அதாவது குறைந்த ஏற்றுமதியும் கூடிய இறக்குமதியும் நிலவுவதால் அந்நிய செலாவணியில் பற்றாக்குறை பெரிதும் ஏற்படுகிறது எனவே தனது முதலாவது பிரயத்தனம் ஏற்றுமதி, இறக்குமதிகளுக்கிடையே சம நிலையை ஏற்படுத்துவதுதான் என்றார்.

உ 100 நாட்களுக்குள் விலைவாசியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடுவேன் என்று ராஜீவ் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருந்தார். இதைப் பற்றிப் பத்திரிகையாளர்கள் கேள்வி கேட்ட போது அவ்வாறு விலைவாசியைக் கட்டுப்படுத்துவது மாயாஜால வித்தையல்ல அது உடனடியாகசாத்தியப்படாது ஆயினும் காலப்போக்கில் முயற்சிக்கலாம் என்றார்

இவற்றைவிட வேறுபிரச்சனைகள் பற்றி கூறினாராயினும் இவைகளே பிரதான மானவை. கட்சி வேறுபாடு

## சாரணன்

களுக்கு அப்பால் இந்தியாவின் தேச நலனைக் கருத்திற்கொண்டு சகல கட்சியினரும் பொருளாதாரம் பற்றிய பொது உடன்பாடுக்கு வர வேண்டுமென்றும் அரசுடன் ஒத்துழைக்குமாறும் கேட்டுக் கொண்டார்

பிரதமர் பி. வி நரசிம்ம ராவ், இடதுசாரி வலதுசாரி என்ற வேறுபாடின்றி சகல எதிர்தரப்புத் தலைவர்களையும் 26-6-91இல் தனித் தனியே சந்தித்து நாட்டின் நெருக்கடிகளை விளக்கி தனது அரசுக்கு ஒத்துழைக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இவ்வாறு சந்தித்தவர்களுள் முக்கியமானவர்கள் வி பி. சிங் அத்வானி மற்றும் இடதுசாரி தலைவர்களும் அடங்குவர். அரவணைத்துப் போவதில் வல்லவர் என்ற பெயரைக் கேட்ட நரசிம்மராவ் இவ்வாறு தன் அரவணைக்கும் நாடகத்தைத் தொடக்கியுள்ளார். இதனை வெறும் சம்பிரதாயபூர்வமான விடயம் என்று கொள்ள முடியாது

இந்தியாவின் சமஷ்டி அமைப்பை உண்மையான சமஷ்டி அமைப்பு என்று கூறமுடியாது அது ஒரு அரைச்சமஷ்டி என்றே கூறவேண்டும். அங்குள்ள இந்து முஸ்லிம் பிரச்சினை, தேசிய இனப்பிரச்சினைகள் என்பன பெரிதும் நொதி நிலையிலேயே உள்ளன. காஷ்மீர், பஞ்சாப், அஸாம் ஆகியன பிரதானமானவை இவை தவிர நாட்டின் ஏனைய பாகங்களிலும் இத்தகைய இனரீதியான கொந்தளிப்புகள் உண்டு. இப்பிரச்சினைகள் இன்று சமரச எல்லையைக் கடந்து நிற்கின்றன. ஆயுதந் தாங்கிய போராட்டங்கள் வளர்ந்துள்ளன. பஞ்சாபில் இன்று தேர்தலை அரசு நினைத்தே பார்க்கமுடியாதுள்ளது காஷ்மீரும் இதே நிலைதான் அத்துடன் காஷ்மீர் பக்கத்தில் மேலும் பல அனுகூலங்கள் உண்டு. குறிப்பாக காஷ்மீரிகளுக்கு, பாகிஸ்தானின் ஆதரவு இருப்பதுடன் பாகிஸ்தானின் அருகில் இருப்பதும் இந்திய அரசுக்குப் பெரும் தலையிடியாகும்.

இவற்றைத்தவிர நக்ஸலைட்டுகளின் வளர்ச்சியும் இப்பொழுது அதிகரித்து வருகின்றது. இத்தகைய சூழலில் ஒரு ஸ்திரமான அரசாங்கம் உருவாகாமல் இருப்பது கவனிக்கத்தக்கது. நரசிம்மராவ் அரசாங்கம் ஒரு சிறுபான்மை அரசாங்கம் தேசிய முன்னணியும் இடதுசாரிகளும் கைகொடுக்கும்வரை ஓரளவு நின்று பிடிக்கலாம் ஆயினும் வேறு இரு பிரச்சினைகள் பெரிதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவை.

பாரதீய ஜனதா துரித வளர்ச்சி அடைந்துள்ளது. எதிரணியில் தனிப்பெரும் பலம் பொருந்திய கட்சி என்ற நிலையை அடைந்துள்ளது. கடந்த மூன்று தேர்தல்களிலும் அது மேலோங்கியே வளர்ந்துள்ளது இக்கட்சியானது வடநாட்டு மோகங்கொண்ட ஒரு ஸ்தாபனம் என்பதுடன் முஸ்லிம் பிரச்சினைக்கெதிராக தீவிர நிலைப்பாட்டைக் கொண்ட ஒரு ஸ்தாபனமும் கூட,

தேசிய முன்னணி அரசாங்கத்தை பாரதீய ஜனதா கவிழ்த்ததற்கான முக்கிய காரணம் பாபர் மசூதிப் பிரச்சினை அல்ல. முக்கியமாக மண்டல் கமிஷன் அறிக்கை நடைமுறை படுத்த முற்பட்டதே முக்கிய காரணம் ஆகும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அதிக இடம் ஒதுக்கப்படுவதை விரும்பாத அக்கட்சி பாபர் மசூதி பிரச்சினையின் பெயரால் தேசிய முன்னணி அரசாங்கத்தைக் கவிழ்த்தது

அதேபோல நரசிம்மராவ் தென்னாட்டவர் என்ற காரணத்தால் அவர் தொடர்ந்து பதவியிலிருப்பதை மனம் சகிக்க முடியாமல், முஸ்லிம் பிரச்சினையின் பேரிலோ, அல்லது காஷ்மீர் பிரச்சினையின் பேராலே அல்லது பஞ்சாப் பிரச்சினையின் பேராலோ நரசிம்மராவ் அரசுக்கு பெரும் தலையிடியைக் கொடுக்கலாம்

எனவே தலைமைத்துவப் பிரச்சினை என்பது ஒரு சீரிய பிரச்சினையாகவே இங்குள்ளது. பாரதீய ஜனதாவின் வளர்ச்சிக்கு எதிராக தீவிர நிலைப்பாட்டைக் கொண்ட இடதுசாரிகள் நரசிம்மராவ் அரசைப் பாதுகாக்க முற்படலாம் என்பது உறுதி தேசிய முன்னணியும் ஓரளவு இத்தகைய நிலைப்பாட்டையே எடுக்கலாம் ஆனால் பாராளுமன்றத்துக்கு உள்ளான அரசியலிலேயே இது சாத்தியம்.

பலம் பொருந்திய கட்சி என்ற வகையில் பாரதீய ஜனதா பாராளுமன்றத்துக்கு வெளியே நேரடிப் போராட்டங்களை நடத்துமேயாயின் அதனால் நரசிம்மராவுக்கு பெரிதும் தலையிடியைக் கொடுக்க முடியும்.

இவ்வாறு உள்நாட்டுப் பிரச்சினைகள் ஒருபுறமிருக்க அவற்றுக்கு இசைவான வகையில் ஒரு புதிய வெளிநாட்டுக் கொள்கையை வகுக்க வேண்டியிருக்கும். ஓரளவு ஸ்திரத் தன்மை வாய்ந்த வெளிநாட்டுக் கொள்கையை வகுப்பதாயின் சில ஆண்டுகள் அதற்குத் தேவைப்படும். உள்நாட்டு ரீதியான பலவீனமான அரசுடன் வெளிநாட்டு அரசுகள் பேரம் பேசும் இந்த வகையில் உள்நாட்டுக் கொள்கையும், வெளிநாட்டுக் கொள்கையும் ஒன்றோடு ஒன்று நெருக்கமாகப் பின்னிப் பிணைந்தவையாகும். எனவே உள்நாட்டு ரீதியாக ஸ்திரமான நிலையை உருவாக்க வேண்டும். அதே வேளையில் ஒரு சரியான வெளிநாட்டுக் கொள்கையை வகுக்க அறிவியல் ரீதியில் சில ஆண்டுகளும், பின்னர் அதை நடைமுறைப் படுத்த மேலும் சில ஆண்டுகளும் எடுக்கும்.

நரசிம்மராவ் அரசாங்கம் வெளிநாட்டுக் கொள்கை பற்றி ஒரு புதிய கட்டத்தில் நிற்கிறது. இந்திய வரலாற்றிலேயே ஒரு புதிய திருப்பு முனையில் நிற்கிறது இதனைச் சாதாரண பலம் கொண்டு எதிர் கொள்ள முடியாது. இங்கு இடம்பெறும் அதிகாரம் மிகவும் அடிப்படையானது இதனை நரசிம்மராவ் அரசு சமாளிப்பது இலகுவானதல்ல மிகபெரும் பிரயத்தனங்களுக்கு அது உட்பட வேண்டும்.

அயல்நாட்டுப் பிரச்சினையில் பாகிஸ்தானின் அணுகுண்டு பற்றிய பிரச்சினை இலங்கைப் பிரச்சினை என்பன தலையாயது. உண்மையில் 70களின்பிற்பகுதியிலேயே இந்திய அணுகுண்டு தயாரித்து விட்டது ஆனால் அதனை அதுபிரகடனப்படுத்தவில்லை இப்போது அணுகுண்டுத் தயாரிப்பு தடை ஏற்பாட்டின் கீழ் அமெரிக்கா இந்தியாவைக் கொண்டு வருவதற்கான சட்டத்தை செனட் சபையில் நிறைவேற்றியுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி கையெழுத்திடும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அது செல்லுபடியாகும். அவ்வாறு செல்லுபடியாகும் போது இந்தியாவுக்கு எதிரான பொருளாதாரத்தடை நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொள்ள முடியும் நரசிம்மராவ் அரசுக்கு இது பெரு தலையிடியாகும். பாகிஸ்தானிய அணுகுண்டு வெடிப்பு முயற்சிக்கு எதிரான நடவடிக்கைகளைப் போலவே இந்தியாவுக்கு எதிராகவும் மேற் கொள்ளலாம். இதில் உண்மையான நோக்கம் பலவீனமான அரசிடம் பேரத்தை அதிகரிப்பதே ஒழிய வேறல்ல.

இந்த நிலையில் பாகிஸ்தானின் அணுகுண்டு வெடிப்பு முயற்சியோடு இந்தியா தனது அணுகுண்டு பிரச்சினையையும் கையாள்வது பெரும் சிரமமாகும்

அடுத்து இலங்கைப் பிரச்சினையில் தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்றைய நிலையில் இந்தியாவின் கைகடந்த பிரச்சினையாக உள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்டம் இந்தியா எதிர்பார்த்ததை விட வேறு வித்தியாசமான பரிமாணத்தில் முன்னேறியுள்ளது

அதேபோல இலங்கை அரசும் இந்தியாவின் கட்டுப்பாட்டுக்கு உட்படமாட்டாத நிலைமை உருவாகியுள்ளது. இனிவரப்போகும் 2, 3, வருடகால கட்டங்கள் பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகவே இருக்கும். இதனை முகம் கொடுக்க நரசிம்மராவ் அரசு ஒரு புதிய கட்டத்திற்கே போக வேண்டி ஏற்படும். அது ராஜீவ் அரசின் பிழையான பாதையிலிருந்து தன்னை சரியான பாதைக்கு இட்டுச் செல்வது பெரிதும் கடினம் இந்நிலையில் ஏற்கனவே பிரச்சினைகள் குழப்பமடைந்து விட்டன எப்படியோ நினைத்த மாதிரத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், இலங்கைப் பிரச்சினையையும் இந்தியா கையாள முடியாமல் உள்ளது

உள்துறை, வெளிவிவகாரம், பாதுகாப்பு போன்ற பல முக்கிய அமைச்சுக்களிலும் இருந்து அனுபவம் வாய்ந்தவர் நரசிம்மராவ் இவர் திறமையும் சாமர்த்தியமும் மிக்கவர் என்பதில் சந்தேகமில்லை ஆயினும் இவர் எதிர்நோக்கவேண்டியயதார்த்தம் மிகவும் கடினமானது விரும்பியோ, விரும்பாமலோ யதார்த்தத்தில் அமெரிக்காவை அரவணைப்பதைத் தவிர இவருக்கு வேறு வழி இருக்காது எனவே உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரச்சினை அனைத்திற்குமான தீர்வானது எவ்வளவு தூரம் அமெரிக்காவிற்கு விட்டுக் கொடுப்பு செய்வது என்பதிலேயே தங்கியுள்ளது;

## ஈச்சமோட்டைவிளை. கழகம் இறுதி ஆட்டத்திற்கு தெரிவு

(யாழ் விளையாட்டு நிருபர்)

பாண்டியன்தாழ்வு ''றெட்ஸ்ரார் விளையாட்டுக் கழகத் தினரால்'' நடாத்தப்பட்டு வரும் ஓவர்கேம் முறையிலான கரப்பந்தாட்டப்போட்டியில் ஈச்சமோட்டை சன சமூக நிலைய அணிக்கும் றெட்ஸ்ரார் விளையாட்டுக் கழக ஏ பிரிவு அணிக்குமிடையில் நடைபெற்ற விறுவிறுப்பான போட்டியில் ஈச்சமோட்டை விளையாட்டுக் கழக அணி இரு நேர் செற்றில் 15-12, 15-10 என்ற புள்ளி வித்தியாசத்தில் வெற்றியீட்டி இறுதி ஆட்டத்தில் விளையாடுவதற்கு தகைமை பெற்றுள்ளது

ஈச்சமோட்டை இதற்கு முன்பு விளையாடிய போட்டியில் கொய்யாத்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை இரண்டு நேர் செற்றுகளில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது (42)

## சிவராஜன், சுபா இராமநாதபுரத்தில்?

(சென்னை)

ரஜீவ் காந்தி கொலையில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் சிவராஜன், சுபா ஆகிய இருவரும் இலங்கைக்கு தப்பிச் செல்ல இராமநாதபுரம் மாவட்டத்துள் சென்றிருக்கக் கூடும் எனப் பொலிஸார் கூறியுள்ளனர். இதனை அடுத்து இந்தியக் கடற்படையும், கரையோரக் காவற்படையும் உஷார்படுத்தப்பட்டுள்ளன.

## சாரதா சேவாச்சிரமத்தின் சிறுவர் கல்வித்திட்டம்

(நெல்லியடி)

பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் அநாதைச் சிறுவர்களுக்கு கல்வி வழங்கும் திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளது. இதற்காக இரு கிளைகளைச் சேவச்சிரமம் கன்னாகத்திலும் பொலிகண்டியிலும் ஆரம்பிக்கும்.

ஆச்சிரமத்தின் பொறுப்பாளர் சுவாமி சித்ரூப னந்தா தாய் தந்தையரை இழந்துள்ள 6- 18 வயதுக்குட்பட்டோரிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளார். விண்ணப்ப முடிவு திகதி 3-7-91 ஆகும் விண்ணப்பங்கள் மேற்படி ஆச்சிரமத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

தெரிவுசெய்யப்பட்ட வசதிகள் அவர்களுக்கு அடுத்த ஆண்டிலிருந்து ஒழுங்கு செய்யப்படும்.

## ஒய்வூதியத்துக்கு கட்டுநிதியில்லை

ஒய்வூதியம் பெறுவோருக்கு கண்டி ஒய்வூதியத்திணைக்களத்தினால் வழங்கப்பட்ட காசோலைகள் வங்கிகளில் கட்டுநிதி இல்லாததால் திருப்பி விடப்பட்டுள்ளன.

இவ் வருடம் ஜனவரியில் புதிய திட்டத்தின்கீழ் இளைப்பாறியவர்களுக்கு நிரப்பிய ஒய்வூதியமாக மொத்தம் ரூபா 60 லட்சத்துக்குக் காசோலைகள் வழங்கப்பட்டன. நூற்றுக்கும் அதிகமான ஒய்வூதியக்காரர் வங்கிகளில் காசோலைகளை இட்டசமயம் பணமில்லாமையால் காசோலைகள் திருப்பப்பட்டுள்ளன.

# பாவனைக்குதவாத பண்டம் கண்டுபிடித்து அழிப்பு

(யாழ்ப்பாணம்)

வர்த்தக நிலையங்கள் மீது உணவு மருந்து பரிசோதகர் குழு ஒன்று நடாத்திய திடீர் சோதனையில் அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பாவனைக்குதவாத பண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டுஅழிக்கப்பட்டன.

கடந்த வாரம் கிளிநொச்சி மாவட்டத்தில் உணவு மருந்துப் பரிசோதகர் ஏ. மகாதேவன் தலைமையில் சென்ற குழுவினர் அங்கு உள்ள தேநீர்க் கடைகளில் பழுதடைந்த றொட்டி, வடை ஆகியவையும் பலசரக்குக் கடைகளில் பாவனைக்காலம் முடிவடைந்த வினாகிரி மற்றும் போலி குளுக்கோஸ் ஆகியனவும் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு அவை பறிமுதல் செய்யப்பட்டு உரிமையாளர்கள் முன்னிலையில் அழிக்கப்பட்டன.

அத்துடன் சந்தைப்பகுதியில் தரம் குறைந்த தேயிலை, பாவனைக்குதவாத கௌபி, பயறு ஆகியனவும் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

இதேவேளை தெல்லிப்பளைப் பிரதேசத்தில் சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தும் வகையில் திறந்த நிலையில் வைத்து விற்பனை செய்யப்பட்ட 100 இறாத்தலுக்கு மேற்பட்ட பாண்கள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன.

பலதடவை பரிசோதகர்களால் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்த போதும் அவர்கள் அதை உதாசீனம் செய்திருந்தனர் எனவும் இவ்வாறான பொருட்களை வாங்குவதில் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும் எனவும் மேற்படி குழுவினர் கேட்டுள்ளனர்.

மேற்படி பரிசோதனை நடவடிக்கைகள் விரைவில் ஏனைய இடங்களிலும் நடைபெறவுள்ளதாகவும் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் வர்த்தகர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் மேற்படி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச)

# திலீபன் ஞாபகார்த்தமாக தடகள விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரின் ஆதரவில் தியாகி திலீபன் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்கான தடகள (மெய்வல்லுனர்) விளையாட்டு விழா ஒன்று நடைபெறவுள்ளது.

எமது பிரதேசத்தில் விளையாட்டுக்களின் தரத்தை உயர்த்துவதன் பொருட்டும் எமது மக்களின் உடல் உள வளர்ச்சியினை பாதுகாக்கும் பொருட்டும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மேற்படி போட்டிகளில் சகல விளையாட்டு வீரர்களையும் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இப்போட்டிகள் முதலில் வட்டவைகள் மட்டத்திலும் பின்னர் மாவட்ட மட்டத்திலும் நடைபெறவுள்ளன.

வட்டவை மட்டத்திலான போட்டிகளின் விண்ணப்பங்களை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி வட்டவைச் செயலகங்களில் இரண்டு ரூபாவினைச் செலுத்தி, பெற்று எதிர் வரும் பத்தாம் திகதிக்கு முன் பிரதேச விளையாட்டுப் பொறுப்பாளருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கும்படி கேட்கப்படுகின்றனர். இதற்கென வட்டவைகள் தோறும் விளையாட்டுப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# 6 அரச கூ. தாபனங்கள் தனியார் மயப்படும்

(கொழும்பு)

அரசாங்கம் மேலதிகமாக ஆறு அரச கூட்டுத்தாபனங்களைத் தனியார் மயப்படுத்தவுள்ளது.

ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம், உலோகக் கூட்டுத்தாபனம், கனிப்பொருள் கூட்டுத்தாபனம், சிமெந்துக் கூட்டுத்தாபனம் உரக் கூட்டுத்தாபனம், சுரங்க மற்றும் கனிவளக் கூட்டுததாபனம் ஆகியவையே தனியார். மயப்படுத்தப்படவுள்ள கூட்டுத் தாபனங்களாகும்

ஜின் தோட்டையிலும், கொஸ்கமவிலும் உள்ள ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபன ஆலைகள் சென்ற ஆண்டிலேயே மூடப்பட்டு விட்டன. இவற்றைத்தனியார் துறையினருக்கு விற்பதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன சென்ற ஆண்டும் கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டு, விலை குறைவாகக் கோரப்பட்டிருந்ததால் விற்பனை செய்யும் எண்ணம் கைவிடப்பட்டது.

மக்கலல உலோகக் கூட்டுத்தாபனத்தைப் பிரசித்தமான இங்கிலாந்து நிறுவனம் ஒன்று வாங்கவுள்ளது விற்பதற்கான கனிப்பொருள் கூட்டுத் தாபனத்தின் விலையும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

ஹூணுப்பிட்டியா விலுள்ள உரக் கூட்டுத்தாபனமும் உள்ளூர் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு விற்கப்படவுள்ளது.

தோல் கூட்டுத் தாபனத்தையும் விற்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு ஜூலை 8ஆம் திகதி தனியார் ஒருவருக்குக் கையளிக்கப்படவுள்ளது.

# ஒரு வருட இடைவெளியில் ஆணையாளர் மாநாடு

(யாழ்ப்பாணம்)

மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நடைபெறும் எனகூறப்பட்டிருந்த கூட்டுறவுத் திணைக்கள ஆணையாளர் மாநாடு கடந்த ஒருவருடத்தின் பின் மீண்டும் எதிர்வரும் ஒன்பதாம் திகதி திருகோணமலையில் நடைபெற உள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணத்திற்குட்பட்ட கூட்டுறவு ஆணையாளர்களுக்கு இடையில் நடைபெற இருக்கும் இந்த மாநாட்டில் வடக்கு கிழக்கு பகுதியில் கடந்த காலங்களில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக கூட்டுறவுத்துறையின் பாதிப்புகள் பற்றியும் எதிர் வரும் காலத்தில் கூட்டுறவுத்துறையின் தொழிற்பாடுகள் பற்றியும் ஆராயப்பட உள்ளதாக யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் கூறியுள்ளார். (வே)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண கொடுப்பனவுகள்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட ஒரு தொகுதி மக்களுக்கான நிவாரணக் கொடுப்பனவுகளை யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு வழங்கவுள்ளது.

இராணுவ நடவடிக்கைகளின் போது உயிரிழந்த சுமார் 609 பேருக்கும், காயமடைந்த 75 பேருக்கும் மரணச் செலவுக்காக சுமார் 102 பேருக்கும், நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி ஆக்கப்பட்டுள்ளன வெகுவிரைவில் வங்கிகள் மூலம் இக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

அதேவேளை இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான மக்களின் விண்ணப்பங்கள் கொடுப்பனவுக்குத் தேவையான பணம் இல்லையாக் செயலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஈ)

# யாழ். மாவட்ட குளங்களை புனரமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள சிறுகுளங்களை புனரமைப்பதற்கு கிராம அபிவிருத்தி அலுவலகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

நீர்ப்பாசனத்திற்கு பயன்படுத்தப்படாத சிறிய குளங்களில் நன்நீரை தேக்கி வைக்கும் பொருட்டு இம்மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ஒவ்வொன்றில் இருந்தும் ஐந்து குளங்கள் தெரிவு செய்யப்பட்டு புனரமைக்கப்படவிருக்கின்றன.

இதன் முன்னேற்பாடாக சிரேஷ்ட தொழில்நுட்ப உதவியாளர்களுக்கான விசேட பயிற்சி வகுப்பு ஒன்று யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இம் மாவட்டத்தில் உள்ள ஏனைய பெரிய மற்றும் நீர்ப்பாசன வசதிக்கான குளங்களையும் புனரமைப்பதற்கும் யாழ். செயலகமும் மற்றும் சில அரச சார்பற்ற, தொண்டர் நிறுவனங்களும் முயற்சி மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (க)

# புதிய ஏடு

எதிர்காலம்
அறிவுச்சூனியமானவர்களை தந்துவிடும்
பேராபத்துக்கு எதிரான போராட்டத்தை
இதோ நான் ஏடு தொடக்கி வைக்கிறேன்.

எழுதுகோலில் உயிர் முனைகொண்டு
புதிய ஞாயிறின் சுடர்களை வரையும்
புதுயுகன் நான்
எனது குரலுக்குச் செவிகொடுங்கள்

இன்றில்லை விடினும் என்றோ
அடிமனங்களிலே சுவறிடப்போகும்
அந்தகாரத்தை முன்னுணர்ந்த குரலிது
ஒளியை விழைவோரே செவிகொடுங்கள்

அறிவு முடமான சூழலில்
விடுதலை தனது கால்களில் நடக்குமா?
முளைவிடும் பருவம் உறிவின்றிக் கருகினால்
பாலை மண்ணிலே பச்சையம் படருமா?

முளை வளர்ந்து ஓங்கி மரமாகி
வானெனப் பரந்த அறிவின் வெளியளாவி
செழுங்கிளை தாங்கும் விழுதென இறங்குதல்
இன்றையத் தேவை என்றறிவோமா?

முளை கொண்ட மண்ணில் செறிந்துள்ள
முந்தைப் பண்பாட்டின பசளையை உறிஞ்ச
வேரோடி மண்ணின விடுதலை காக்கும்
விழுதாய் ஊன்றுதல் பெரும்பணி அல்லவா?

விழுதாய் இறங்குவோம்
வெளியை அளாவி ஒளியை உள்வாங்கி
விளைபயனாக மண்ணிலே ஊன்றும்
விழுதாய இறங்குவோம்

விழுதாய் இறங்குதல் கிளைகளைத் தாங்க
எமது சமூகம் முழுமையும்
விடுதலை நிழலில் எழுந்திருக்கும் வரை
அறிவின் விழுதாய் ஆழ இறங்குவோம்

விழுதுகளே வாருங்கள்
இருள் படிந்த மனங்களை உழுவோம்
விதைப்போம் அறிவுக் கொடுப்போம்
விடுதலை வளர்ப்போம்
பலமுகப் பணிகளின் கற்றல் தொடங்குவோம்

கட்டடங்களினுள் மட்டுப்பட்டதா கல்வி?
கற்றல் வெட்ட வெளியிலும் நிகழலாம்
மரப்புயர்ந்த வயலிலும் நடக்கலாம்
விழுதுவிட்ட ஆலின் பந்தலின் கீழேயும்
ஔவை மூதாட்டியின்
"அறஞ் செய விரும்பு" வை ஓதலாம்.

ஆலின் விதையாய் நாளை மாறலாம்
முளைத்திறன் கொண்டு நிமிர்ந்து படர்ந்து
விழுதுகள் ஊன்றினால் ஆலின் நிழலில்
விடுதலைப் பெரும்படை தங்கலாம் அல்லவா?

-சுபாஷ்

# கண்டியிலும் வீதித்தடை

(கண்டி)

கண்டியிலும் வீதித்தடை பொலிசாரால் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையைக் கடந்து செல்லும் வீதி, பாதுகாப்புக் காரணங்களுக்காக வாகனப் போக்குவரத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மல்வத்த மகாவிகாரைக்கு அருகாமையில் உள்ள சங்கராஜ மாவத்தையால் வாகனப் போக்குவரத்து வழிதிருப்பப்பட்டுள்ளது.

இது வரவேற்கத் தகுந்த நடவடிக்கை என தலதா மாளிகை தியவதன நிலமே நிறஞ்சன் விஜேரத்ன தெரிவித்தார்.

வீதித்தடை கடந்த திங்கள் முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

## சிறிலங்காவின்

(1-ஆம் பக்கத்தொடர்ச்சி)

பொருளாதாரச் சமூகம் சிறிலங்காவைக் குறை கூறியுள்ளது.

சிறிலங்காவில் மனித உரிமைகள் மீறப்படுவதுகுறித்துத் தாம் கவலை கொண்டிருப்பதாகவும் அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது

ஐரோப்பிய பொருளாதாரச் சமூகத்தின் இவ்வறிக்கையை பிரிட்டிஷ் வெளியுறவுத் திணைக்களம் செய்தியாளருக்கு வழங்கியது.

அதே வேளை வளர்முக நாடுகளில் "நல்ல அரசு" ஒன்றுக்கு ஊக்குவிப்பு அளிக்கும் வகையில் பிரித்தானிய அரசு 820 லட்சம் அமெரிக்க டாலர்களை கடந்த செவ்வாய்க் கிழமை அன்று ஒதுக்கீடு செய்துள்ளது.

அடிப்படை மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் நற்செயலை ஊக்குவிப்பதோடு பயனளிக்கக் கூடிய உதவிகளை வழங்குவதை அதிகரிப்பதும், அபிவிருத்தியை உயர்த்துவதும் எமது உதவியின் நோக்கமென்று பிரித்தானிய வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சர் லின்டா சோக்கர் இத்திட்டத்தை அறிமுகப் படுத்திப் பேசும்போது தெரிவித்தார்.

பொருளாதாரச் சீர்திருத்தம் தேர்தல் ஒழுங்கு அறிவுரைகள், பொலிஸ் சுங்க, சிவில் அதிகாரிகள் மற்றும் மனித உரிமை அமைப்புகள், அரசசார்பற்ற மனிதநேய ஸ்தாபனங்களுக்கு உதவுவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும் என்றார் அவர்.

பிரித்தானிய அரசு உதவி வழங்கும்போது உதவியைப் பெறும் வளர்முக நாடுகள் நற்செயல்களையும் கருத்திற் கொள்ளும் என்று லின்டா சோக்கர் மேலும் தெரிவித்தார்.

### சிந்தனைக்கு

சரியான செயலைத் தவறான காரணங்களுக்காகச் செய்யத் தூண்டும் துடிப்பே துரோகங்களில் கொடியது.

— டி எஸ். எலியட்


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 02 07.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


## சிறிலங்காவுடன் மீண்டும் ஓர் ஒப்பந்தம்

"கிரிக்கெட்" - இதனை ஒரு கனவான்மார் விளையாட்டு என்று சொல்வார்கள் அதாவது கௌரவமானவர்களுக்கு" இடையிலான விளையாட்டு என்பது இதன் பொருளாகும்.

நடுவர்களின் தீர்ப்பை எந்தவித எதிர்ப்பும் இன்றி ஏற்றுக் கொள்ளுதல், நடுவர்கள் விடும் தவறுகளைக் கூட பெரிதுபடுத்தாமல் நடந்து கொள்ளுதல் எதிரணியினருடன் நட்புறவுடன் பழகுதல், விளையாட்டின்போது விட்டுக் கொடுப்புகளுக்குத் தயாராய் இருத்தல் போன்ற நற்பண்புகளுக்காகவே இவ்விளையாட்டு கனவான்மார் விளையாட்டு என அழைக்கப்பட்டது.

ஆனால், காலப்போக்கில் அவ்விளையாட்டிலும் நற்பண்புகள் பல மறைந்து பொழுது போக்கிற்கும், உடல் நலத்திற்கும் விளையாட்டு என்ற நிலை மாறி பணம் சம்பாதிக்கும் ஊடகமாக இவ்விளையாட்டுகள் மாறியமையால் போட்டியும், ஊழலும் மிக்கதாக இவ்விளையாட்டு மாறியது. மேலும் இவ்விளையாட்டிலும் அரசியல் குறுக்கீடுகள் இடம்பெறுகின்றமையால் இன்று இவ்விளையாட்டு பூரணமாக தனது கண்ணியத் தன்மையை இழந்து விட்டது.

இக் 'கிரிக்கெட்டைப்' போன்றே ஒப்பந்தங்களும் கனவான்மார்களுக்கிடையிலான உடன்பாடுகள் என்றே ஆரம்பத்தில் அழைக்கப்பட்டன. பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளுதல், விட்டுக் கொடுப்புக்களை மேற்கொள்ளுதல் அதற்கமைவாக ஒப்பந்தங்களில் ஏற்றுக் கொண்டவற்றை நடைமுறைப்படுத்துதல் என்பனவையே ஒப்பந்தங்களும் அவ்வாறு அழைக்கப்படக் காரணமாயின.

ஆனால், காலப்போக்கில் கிரிக்கெட்டைப் போன்றே ஒப்பந்தங்களும் தமது கண்ணியத்தை இழந்தன இதற்கு விளையாட்டு வீரர்களைப் போன்று அரசியல்வாதிகளும் கண்ணியம் தவறி நடக்கத் தொடங்கியமையே காரணமாகும்.

ஒப்பந்தங்கள் மீறப்படுவதும், உதாசீனம் செய்யப்படுவதும் உலகில் பலவாறாக இன்று இடம்பெறுவதாக இருப்பினும் ஒப்பந்தங்களை மீறுவதும், கிழித்தெறிவதும் சிறிலங்காவைப் பொறுத்து ஒரு விசேடமான அம்சமாகும்.

சிறிலங்கா அரசைப் பொறுத்து இலங்கைத் தீவினுள்ளும் வெளியிலும் பல ஒப்பந்தங்களை வேறுபட்ட காலங்களில் செய்துள்ளது தமிழர் இனப்பிரச்சினை தொடர்பாகச் செய்துகொள்ளப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம் (1957), டட்லி - செல்வா ஒப்பந்தம் (1965), இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளியினர் தொடர்பாக இந்தியவுடன் செய்துகொள்ளப்பட்ட சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் (1964) கச்சதீவு ஒப்பந்தம் 1975) இலங்கைத் தமிழரின் பெயரால் இந்தியாவுடன் செய்துகொள்ளப்பட்ட இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கை (1987) போன்ற சகல ஒப்பந்தங்களிலும் சிறிலங்கா கடப்பாடுகளை நிறைவேற்றாமல் உதாசீனம் செய்து கொண்டே வந்துள்ளது.

இறுதியாக 1987 ஆம் ஆண்டு இந்தியாவுடன் செய்து கொண்ட சமாதான உடன்படிக்கையில், இலங்கைத் தமிழர் தொடர்பாக நிறைவேற்றுவதாக ஏற்றுக்கொண்ட சரத்துக்களை மட்டுமல்ல' இந்தியா தொடர்பாக அளித்த வாக்குறுதிகளையும் சிறிலங்கா உதாசீனம் செய்துள்ளது. அமெரிக்க வானொலியான 'வொய்ஸ் ஒவ் அமெரிக்காவிற்கு' இடவசதி அளிப்பதன் மூலம் ஒப்பந்தச் சரத்துக்களை சிறிலங்கா மீறியுள்ளது. அதேவேளை இன்றுள்ள சர்வதேசச் சூழ்நிலையும் அதில் அமெரிக்காவின் கை ஓங்கியுள்ளமையும் இந்தியாவின் நெருக்கடிகளும் இது தொடர்பாக இந்தியா கடும் போக்கு எடுக்க முடியாது என சிறிலங்கா கருதுகின்றது.

இந்நிலையில், இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாகவும், சிறிலங்கவுடனான உறவு குறித்தும் சிறிலங்காவுடன் இந்தியா புதிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளவேண்டும் என தமிழகத்தின் புதிய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

ஆனால், சிறிலங்காவைப் பொறுத்து ஒப்பந்தம் பழையதாக இருந்தாலென்ன, புதியதாக இருந்தால் என்ன தனக்கு சாதகமான பகுதி மட்டுமே சிறிலங்காவின் கண்ணுக்குத் தெரியும் ஒப்பந்தச் சரத்துக்களாகும். ஆகையினால் ஒப்பந்தங்கள் மூலம் வரலாற்று ரீதியாக சீர் கெட்டுபோன இந்திய - சிறிலங்கா உறவைச் சீர் செய்ய முடியாது என்பதோடு இலங்கை இனப்பிரச்சினைக்கும் தீர்வு கண்டுவிட முடியாது இதனை ஏற்காது இந்தியா மீண்டும் ஓர் ஒப்பந்தத்தை சிறிலங்காவுடன் செய்ய முற்படுமானால் எதிர்காலத்தில் அதையிட்டு நாம் இந்திய விசுவாசிந்த அனுதாபங்களைத்தான் தெரிவிக்க வேண்டியநிலை வரும்.

## திரிக்கப்பட்ட வரலாறு திருத்தப்படல் வேண்டும்

(நேற்றைய தொடர்ச்சி)

பண்டைத்தமிழர்கள் தமது காலவழிச் செய்திக் கோவைகளையோ, வரலாற்றுக் குறிப்பேடுகளையோ தொலைநோக்கோடு எழுதிப்போற்றவில்லை அன்றைய வரலாறு பிற்காலத்தவர்களுக்குத் தேவை என்ற எண்ணம் எம்முன்னோருக்கு ஏற்படவில்லை அவரவர் காலத்தில் வாழ்ந்த ஆட்சி செய்த மன்னர்களின் ஆட்சிக் காலத்தை நடுநிறுத்தியே அன்றைய வரலாற்றுக் குறிப்புகள் எழுதப்பட்டன

அன்று ஆண்ட மன்னர்களின் முடிசூடிய நாளிலிருந்து அவர்கள் மறைந்த அல்லது ஆட்சியை இழந்த காலம் வரை தான் அந்தவரலாறு தொடர்ந்தது. பின் மீண்டும் ஆட்சி பீடமேறிய மன்னனின் முடிசூடிய நாளிலிருந்தே வரலாற்றுக் காலம் தொடங்கப்பட்டது. நீண்ட வரலாற்றைக்கொண்ட எமது இனம் தனது வரலாற்றைக்குறித்த ஒரு பொதுமரபை உடைய தொடர் ஆண்டை வைத்துக் குறித்துப் பேணாமையினால் எமது வரலாற்றுத் துறைக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுவிட்டது

"தனித்தனியாக ஒவ்வொரு தனிமனிதரினதும் பிறப்புநாள் நாழிகை போன்றவற்றைக் குறித்துவைத்து கணித்து சாதகம் எழுதிய எம் முன்னோர்கள் சமூகத்தின் வரலாற்றுக் குறிப்புகளை ஒழுங்காக எழுதி வைக்காதது எமக்கு பெரும் இழப்பாகிவிட்டது" என்று டாக்டர் மு. வ. அவர்கள் வேதனையோடு குறிப்பிட்டார்கள்.

தனித்தனி ஆட்களைப் போற்றும் அளவுக்கு நாட்டைப்போற்ற வேண்டும் நாட்டைப்பற்றி அறிய வேண்டும் என்ற எண்ணம் எம் முன்னோரிடம் இருக்கவில்லை,

மீண்டும் மீண்டும் சுழற்சி முறையில்வரும் பிரபவவில் தொடங்கி அட்சயவில் முடிவுறும் 60 ஆண்டு முறையையே நீண்டகாலமாக நாம் பயன்படுத்தி வந்திருக்கிறோம் ஒரு தனி ஆளின் வரலாற்றைக்கூட எழுதப் பயன்படுத்த முடியாத காலத்தைக்கொண்ட தொடர் ஆண்டை எமக்கென வைத்துக் கொண்டு ஒரு இனத்தின் பல்லாயிரம் ஆண்டு வரலாற்றை எழுதிப் பேணுவது எப்படி?

எம் முன்னையர்கள் பண்டைய வரலாற்றுக் குறிப்புக்களை பொதுவான ஒரு தொடர் ஆண்டில் குறித்திருந்தால் இன்று வரலாற்று ஆராய்ச்சி நடத்தும் எமக்கு அது பெருந்துணையாக இருந்திருக்கும். தமிழர்களுக்கும் பின் உருவான இனங்கள், மட்டுமன்றி, தமிழினத்திலிருந்து பிரிந்து தனியான இனமாக உருவான மலையாள இனம் கூட தம் இனத்துக்கென தொடர் ஆண்டு முறையை கொல்லம் ஆண்டு என்ற பெயரில் பயன்படுத்தி வருகிறது. சிங்களவர் பௌத்த ஜெயந்தி ஆண்டை தொடர் ஆண்டாகப் பயன்படுத்துகின்றனர். ஐரோப்பியர் இயேசு கிறிஸ்து பிறந்த ஆண்டை தமது தொடர் ஆண்டாகப் பயன்படுத்துகிறார்கள். தெலுங்கினர், தெலுங்கு வருடத் தொடரொன்றைப் பேணிவருகின்றனர்,

இதுபோன்றே தமிழர்களும் தமக்கென ஒரு தொடர் ஆண்டைப் பயன்படுத்தினால்தான் எமது வரலாற்று நிகழ்வுகளைக் கோர்வைப்படுத்த முடியும். இல்லையேல் எமது வரலாற்று நிகழ்வுகள் மறைந்து விடும்; மறைக்கப்பட்டுவிடும்.



இந்த குறையை உணர்ந்துதான் 1921 இல் தமிழகத்தைச் சேர்ந்த அறிஞர்கள் சான்றோர், புலவர்கள் பலர் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் கூடி ஆராய்ந்து தமிழர்களுக்கென திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டைப் பயன்படுத்துவதென முடிவெடுத்தார்கள். இயேசுகிறிஸ்துவுக்கு 31 ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவர் பிறந்தார் என்ற முடிவுக்குவந்து ஆங்கில ஆண்டினுடன் 31 ஆண்டைக்கூட்டி அதையே திருவள்ளுவர் ஆண்டு என தமிழர்கள் தொடர் ஆண்டாக பயன்படுத்த வேண்டும் என முடிவெடுத்தனர் திருவள்ளுவர் காலம் எது என்பதில் வரலாற்றறிஞர்களுக்கு ஒத்த முடிவு இல்லாத போதிலும் ஒரு குறித்த தொடர் ஆண்டைப்பயன்படுத்துவது என்ற வகையில் உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவர் பெயரில் நம் தொடர் ஆண்டைப் பொதுவாகப் பயன்படுத்த வேண்டும்.

1921 ல் தமிழ அறிஞர்களால் ஏற்கப்பட்ட திருவள்ளுவர் ஆண்டைப்பயன்படுத்துவது என்ற முடிவை 50 ஆண்டுகள் கழித்து தமிழக அரசு 1971 இருந்து தனது நாட்குறிப்பிலும் அடுத்த ஆண்டில் இருந்து அரச தமிழிதழும் பயன்படுத்தியது 1981 ஆம் ஆண்டிலிருந்து தமிழக அரசு அனைத்துப் பணிகளிலும் திருவள்ளுவர் ஆண்டையே பயன்படுத்தி வருகிறது. திருவள்ளுவர் ஆண்டை முதன்மைப்படுத்தி ஆங்கில ஆண்டை அடைப்புக்குறிக்குள் தான் தமிழக அரசு பயன்படுத்துகிறது தமிழகத்திலும் பரவலாக இது நடைமுறைப்படுத்தப்படுகிறது திருவள்ளுவர் ஆண்டுடன் நடைமுறையில் உள்ள தமிழ் மாதம் திகதி பயன்படுத்திக் கொள்வதுடன் நாமும் இது குறித்து ஆராய்ந்து ஒரு முடிவெடுக்க வேண்டும்.

இன்னுமொரு தவறு எம்மிடையே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆங்கில மாதத்தை தமிழில் மொழிபெயர்த்து பயன்படுத்துகின்ற வழக்கம் எம்மில் சிலரிடம் இருந்து வருகிறது ஜனவரி பெப்ரவரி என்பதை தை, மாசி என எழுதுகிறார்கள்.

ஜனவரி 14 ஐ தை 14 என்று எழுதினால் பயன்படுத்தினால் தை 1 ஆம் நாள் பொங்கல் என்ற எமது நீண்டகால தமிழர் பாரம்பரியம் அடிபட்டுப் போகிறது.

1976 மே 5 ஆம் நாள் எமது இயக்கம் விடுதலைப்புலிகள் என்ற பெயர்மாற்றம் கொண்டது இதை நாம் வைகாசி 5 ஆம் நாள் என்று தமிழில் எழுதினால் அதை ஆங்கிலத்தில மொழிபெயர்ப்பவர்கள் மே 20 ஆம் நாள் என்றே எழுதுவர்

தவிர தமிழில் நாம் நீண்ட நாளாகத் தனித்துவமாகப் பயன்படுத்திவரும் மாதங்களின் பெயரை வேறு ஆங்கில மாதங்களுக்குச் சூட்டினால் இரு நடைமுறைகளிலும் குழப்பம் ஏற்படுகிறது எனவே ஆங்கில மாதத்தை ஆங்கிலப் பெயரிலேயே ஜனவரி, பெப்ரவரி எனவும் தமிழ் மாதத்தை தை, மாசி எனவும் பயன்படுத்தவேண்டும்.

மாணவர்களுக்கான சில பாடப்புத்தகங்களில் கூட இது போன்ற முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. இதையும் நாம் முடிவுக்கு கொண்டு வரவேண்டும்.

### புவியியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புவியியற்கழகம் வரும் வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில் பல்கலைக்கழக புவியியல் விரிவுரை மண்டபத்தில் புவியியல் கருத்தரங்கு ஒன்றை நடாத்தவுள்ளது

வடகிழக்கு மாகாணங்களில் நிகழும் மக்களின் உள் - வெளி இடப்பெயர்வும் விளைவுகளும் என்னும் விடயம்தொடர்பாக புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. க. குணபாலன் அவர்கள் உரைநிகழ்த்துவார்.

### இறங்குதுறையில் முடிச்சு மாறிகள்

(ஊர்காவற்றுறை)

சோரதீவு - சங்குப்பிட்டி இறங்குதுறையில் இரவு நேரங்களில் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளது. சென்ற கிழமை இந்த வீதியில் பயணம் செய்தவரின் 25-000 ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டதாகவும் அங்கிருந்து வந்த பயணி ஒருவர் தெரிவித்தார் இது இவ்வாறிருக்க முடிச்சுமாறிகளும் இரவு நேரங்களில் மாயமாக மறைந்து செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. (43)

### வீடுடைத்து சைக்கிள் திருட்டு

(ஊர்காவற்றுறை)

வீட்டுக் கதவை உடைத்து வீட்டுக்குள் இருந்த புதிய ரக சைக்கிள் களவாடப்பட்டுள்ளது இந்த சம்பவம் நேற்றுக் காலை பாண்டியன்தாழ்வு ஒழுங்கையில் உள்ள கனகலிங்கம் என்பவரது இல்லத்தில் இடம்பெற்றுள்ளது. (43)

### கல்வி நிலை பற்றிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி யாழ் மாவட்டச் செயலகத்தில் மாணவர்களின் தற்போதைய கல்வி நிலை பற்றிய கலந்துரையாடல் ஒன்று நேற்று முன் தினம் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் தமிழ் ஆசிரியர் சங்க தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் விடுதலைப்புலிகள் யாழ்மாவட்டப் பொறுப்பாளர் கஸ்ரோ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி யாழ்மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ராஜன் தொழிற்சங்கப் பொறுப்பாளர் சசி மற்றும் தாய்ச் சங்கப்பிரதிநிதிகளும் யாழ் மாவட்ட பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# மத்திய அமைச்சரவை பற்றி தமிழக காங்கிரஸ் அதிருப்தி

(டில்லி)

நரசிம்மராவின் மத்திய அமைச்சரவையில் 'காபினட்' அந்தஸ்து தமிழ் நாட்டுக்கு வழங்கப்படாதது குறித்து தமிழ்நாடு காங்கிரஸில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

தமிழக காங்கிரஸ் நிர்வாகக் குழுத்தலைவர் கே. ராமமூர்த்தி பிரிவினர் இது பற்றிய தமது குறைபாடுகளை பிரதமருக்கு கடிதம் மூலம் தெரிவிக்க முயன்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் காங்கிரஸில் ஜி. கே. மூப்பனார் பிரிவும் அதிருப்தி அடைந்துள்ளது.

காங்கிரஸ் - அ. தி. மு. க. கூட்டணி தமிழ் நாட்டில் அமோக வெற்றி பெற்று 39 பாராளுமன்ற உறுப்பினர்களை லோக்சபாவிற்கு அனுப்பியிருந்தும் ஏன் இத்தகைய நிலை ஏற்பட்டது. இரு பிரிவினரதும் குறைபாடு ஆகும்.

ராமமூர்த்தி பிரிவே அ. தி. மு. க. - காங்கிரஸ் உறவில் ஏற்பட்ட அதிருப்தியை நீக்குவதற்கு காரணமாக இருந்தது என அப்பிரிவினர் தங்கள் மகஜரில் கூறியிருக்கிறார்கள்.

ஆர். பிரபு, இரா. அன்பரசு ஆகியோர் அமைச்சரவையில் இல்லாதது குறித்து மூப்பனார் பிரிவு கோபம் அடைந்துள்ளது. ராமமூர்த்திக்கு 'காபினட்' அந்தஸ்து கிடைக்கவில்லை என ராமமூர்த்தி பிரிவினர் அதிருப்தி அடைந்துள்ளனர்.

ஆனால் தமிழகத்தில் இருந்து மட்டுமன்றி அநேகமாக எல்லா மாநிலங்களிலிருந்துமே இத்தகைய குறைபாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

# ஒக்டோபரில் திட்டமிட்ட ராஜீவின் கொலை

## இந்தியா ருடேயின் தகவல்

(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொலை செய்துவிட தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த வருடம் ஒக்டோபர் மாதமே திட்டம் வகுத்தனர் என்றும், இதற்குப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உத்தரவிட்டிருந்தார் என்றும் இந்தியாவின் முக்கிய பத்திரிகைகளில் ஒன்றாகிய "இந்தியா ருடே" பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் வி. பி சிங்கின் தலைமையிலான தேசிய முன்னணி அரசு கவிழும் அபாயம் எழுந்ததும் இனி காங்கிரஸ் கட்சியே ஆட்சியைப் பிடிக்கக் கூடும் எனக்கருதிய விடுதலைப் புலிகள் ராஜீவைத் தீர்த்துக் கட்டத் திட்டமிட்டார்கள் எனவும், ஏனெனில் ராஜீவ் காந்தி பிரதமராக வரும் கட்டத்தில் இந்திய இராணுவத்தை ராஜீவ்காந்தி இலங்கைக்கு மீண்டும் அனுப்பக்கூடும் எனவும் தமிழகத்தில் புலிகளை ஒடுக்கக் கூடும் எனவும் புலிகள் பயப்பட்டனர் என இப்பத்திரிகை கருத்துத் தெரிவித்துள்ளது.

திரு ராஜீவை பதவியில் அமரவிடாமல் தடுக்க புலிகள் அவரைக் கொலை செய்ய முடிவு செய்து சிவராஜன் என்பவரைத் தமிழகத்திற்கு அனுப்பி வைத்தனர் எனவும் நான்கு பேர் அடங்கிய குழுவாக தமிழகம் வந்த இக்குழு இருமுறை பரிசோதனை நடவடிக்கையில் இறங்கியது எனவும் இப்பத்திரிகை கூறுகிறது.

முதல் முறையாக ஏப்ரல் பதினெட்டாம் திகதி ராஜீவ் காந்தி சென்னை மெரீனா கடற்கரையில் கடற்கரைப் பொதுக்கூட்டத்தில் பேசிய போது இக்குழு அவரைக் கொலை செய்ய முயற்சித்து அது முடியாமல் போய்விட்டது எனவும் குறிப்பிட்டுள்ளது.

இரண்டாவது முறை மே பன்னிரண்டாம் திகதி வி. பி. சிங், கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில் தற்போது ராஜீவைக் கொன்ற தாணு என்ற பெண்மணி கருணாநிதியின் காலைத் தொட்டு வணங்கினார் என்றும்,

மூன்றாம் முறையாக மே இருபத்தோராம் திகதி ஸ்ரீ பெரும்புதூரில் தாணு எனும் அதே பெண்மணி ராஜீவின் காலைத்தொட்டுக் கும்பிட்டு ராஜீவைப் படுகொலை செய்தார் என்றும் இப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

இச் செய்தி ஓரளவு உண்மையானது என இந்திய அதிகாரிகள் கருதுவதாக ஏ. எவ். பி செய்தியாளர் குறிப்பிட்டுள்ளனர்.

## பெற்றுக் கொள்ளவும்

தெல்லிப்பளையைச் சேர்ந்த சு. தவராசா (சமாதானசேவை உத்தியோகத்தர்) என்பவரது அலுவலக ஆவணங்கள் அடங்கிய பார்சல் ஒன்று கடந்த மாதம் 13ம் திகதி காலை மருதங்குளத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது, உரியவர் துணுக்காய் பிரதேசப்பொறுப்பாளர் விவேகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும்.

# கல்வித்திணைக்கள வாகனங்களை முறையாகப் பாவிக்க மாகாண சபை பணிப்பு

(திருக்கோணமலை)

அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படுத்தும் அரச வாகனங்களை முறையாகப் பாவிக்குமாறு வட இழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் கோட்டக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளதாக வாகனப் பாவனை பற்றிய அறிக்கையை மாதாந்தம் தமக்கு அனுப்பிவைக்குமாறும் அவர் மாகாணக்கல்விப் பணிப்பாளர்களுக்கு கண்டிப்பான உத்தரவை வழங்கியுள்ளார்.

# குறைந்த விலையில் இலங்கைமணப்பெண்கள்

(கொழும்பு)

குறைந்த விலையில் இலங்கை மணப்பெண்களை திருமணம் செய்ய இத்தாலிய மணமகன்கள் இம்மாதம் கொழும்பு வரவிருக்கின்றனர்.

இலங்கைப் பெண்கள் மணப்பெண்களாக இத்தாலியருக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றனர். இந்த விற்பனையை இலங்கையைச் சேர்ந்த ஒருவரே நடத்திவருவதாகவும் இத்தாலிய நாட்டு சஞ்சிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கொழும்பில் முன்னர் உதைபந்தாட்ட பயிற்சியாளராக இருந்த நாற்பது வயதுடைய இந்த இலங்கையர் இத்தாலியில் சர்வர் தொழில்தொடங்கி இப்பொழுது இலங்கைப் பெண்களை விற்பவராக வளர்ந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பெண்வியாபாரியிடம், பெண்களை வாங்கிய மணமகன்கள் திருமணத்துக்காக இம்மாதம் கொழும்பு வரவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முகவர் நிலையங்களில் விமானச்சீட்டுப் பணம் கட்டத் தேவையில்லை

## - பிரேமச்சந்திரா

(கொழும்பு)

வெளிநாடுகளில் பணிப்பெண் மற்றும் தொழில்பெற விரும்புபவர்கள் கொழும்பிலுள்ள தொழில்முகவர் நிலையங்களுக்கு விமானச்சீட்டுப் பணத்தை செலுத்தவேண்டிய அவசியமில்லை.

விமானச் சீட்டுக்கான பணத்தை வெளிநாடுகளிலுள்ள தொழில் கொள்வனரே தொழில் முகவர் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். ஆனால் முகவர்கள் ஏமாற்றி விமானச் சீட்டுக்குப் பணத்தைப் பறிப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தொழில்பெற விரும்புவோரிடமிருந்து முகவர் நிலையங்கள் விமானக் கட்டணப்பணத்தை அறவிடுகின்றனர் என்று தொழில் அமைச்சர் ஜி எம். பிரேமச்சந்திரா கூறினார். மோசடித் தொழில் முகவர்களால் ஏமாற்றப்பட்ட பிறகே முறைப்பாடுகள் செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# கம் உதாவ கண்காட்சியில் சிறந்த மீசை, பெரிய வயிறு விநோதப் போட்டிகள்

கம்புறுப்பிட்டி கம் உதாவ கண்காட்சியில் விநோதமான சில போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

சிறந்த மீசை, பெரிய வயிறு நீளமான கொண்டை, நல்ல வழுக்கை போன்ற விநோதப் போட்டிகள் சிறிலங்கா ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்டுள்ளன

கம்உதாவ இறுதி நாளான நாளை 3 ஆம் திகதி சிறிலங்கா பிரதமர் டி. பி. விஜயதுங்கா இப்போட்டிகளில் வெல்வோருக்கு பரிசுகள் வழங்குவார்.

---

நீதிபதி

செவ்வாய்க் கிழமை பி. ப. சுமார் 7-30 மணியளவில் இடம் பெற்றது.

சந்தேகத்தின் பேரில் பொலிஸ் இரண்டு கடற்படை வீரரைக் கைது செய்துள்ளது.

---

ஆனையிறவில்

ண்டு குண்டு வீச்சு விமானங்கள் ஒரு பயணிகள் விமானம் ஆகியன ஆனையிறவு இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் குண்டுவீச்சுத்தாக்குதலை மேற்கொண்டன.

இதனைத் தொடர்ந்து பிற்பகல் 12-30 மணியில் இருந்து 1-45 மணிவரை இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் ஒரு உலங்கு வானூர்தி என்பன இதே பகுதிகளை நோக்கி மீண்டும் தாக்குதலை மேற்கொண்டன.

இதே வேளை முகாமில் இருந்து ஆர். சி. எல். எறிகணைத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிய வருகிறது. இத் தாக்குதல்களால் ஏற்பட்ட சேத விபரங்கள் கிடைக்கவில்லை.

---

இளைப்பாறிய

வித்தன.

சுய விருப்பத்தின் பேரில் யாழ். மாவட்ட ஆசிரியர்கள் கல்வித்திணைக்கள ஊழியர்கள் சுமார் 800 பேர் இளைப்பாறியுள்ளதாகவும், இதுவரை சுமார் 200 பேரின் சுய விருப்புக் கோவைகள் பூரணப்படுத்தப்பட்டு ஓய்வூதியப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும், மிகுதிக் கோவைகளின் வேலைகள் நடைபெற்று வருவதாகவும் யாழ் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

---

இன்று

யற் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் இன்று பிற்பகல் மூன்று மணிக்கு யாழ் பல்கலைக்கழக புவியியல் விரிவுரை மண்டப இலக்கம் 2 இல் நடத்த உள்ளார், இதற்கு அனைவரும் பங்கு பற்றலாம் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

---

சாதனை

தள்ளப்பட்ட எதிர்க்கட்சியிலும், பேரவை ஆரம்பமானதற்கு முன்பே இரண்டு உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்குத் தம்மை ஆதரவாளர்களாக அறிவித்தலில்லை. அதுமட்டுமல்ல, இந்தப்பேரவைபோல் அதிக அளவிலான பெண் உறுப்பினர்கள் (30 பேர்) முந்திய அவைகளில் இருந்ததில்லை. இந்தப் பேரவை தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் முதலமைச்சரைச் சந்திக்கிறது.

---

வடபகுதி நோயாளர்

அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்றனர்; அங்கே இந்நோயாளர்களுக்கெனமிகவும் வசதி குறைந்த தனியான ஓர் வார்ட் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது.

மருத்துவ அறிக்கை

புறக்கணிப்பு:

அங்கே கடமையாற்றும் வைத்திய அதிகாரிகள் நோயாளர்களுடன் வெறுப்புணர்வுடன் நடந்து கொள்வதுடன் யாழ்ப்பாண வைத்தியர்களின் மருத்துவ அறிக்கைகளை வீசி எறிந்து உதாசீனம் செய்கின்றனர். இதனால் நோயாளர் சிகிச்சை பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதேவேளை நோயாளர்களை பார்த்து "நீங்கள் புலிகள் உங்களுக்கெலாம் எதற்கு டாக்டர் சிகிச்சை" என வைத்தியர்கள் கேட்கின்றனரென அண்மையில் கொழும்புக்குச் சிகிச்சைக்காகச் சென்று திரும்பிய பிரபல பாடகர் ஒருவர் தெரிவித்தார்.

இருக்குப்போதிய சிகிச்சை அளிக்கப்படாததால் தனியார் மருத்துவ மனையில் சிகிச்சையைத் தொடர்ந்துபெற்றபின் மீண்டும் தற்போது யாழ். போதனாவைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றுவருகின்றார். (ச)

---

குலதெய்வம்

மீது ஆணையாக என்று கூறினார். பன்னீர்ச் செல்வம் என்ற உறுப்பினரே இவ்வாறு பதவிப் பிரமாணம் செய்ய முயன்றவராவர்.

அப்போது முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவும், நிதியமைச்சர் நெடுஞ்செழியனும் அவரைத் தடுத்து நிறுத்தி இப்படியெல்லாம் கூறக்கூடாது என அறிவுறுத்தவே அவர் அதை அறிவுறுத்தலை ஏற்று "கடவுளறிய எனது கடமையைச் சரிவரச் செய்வேன்" எனக்கூறி பதவிப்பிரமாணம் எடுத்துள்ளார். பன்னீர்ச் செல்வம்.

நேற்று பதவிப்பிரமாணம் எடுத்தவர்களில் பலர் ஜெயலலிதாவின் காலில் விழுந்து வணங்கினர். கும்பகோணத்தைச் சேர்ந்த ஒரு எம்.எல். ஏ பதவிப்பிரமாணம் எடுக்கப் போகும் போது, அது முடிந்த பின்னரும் (இரண்டுமுறை) ஜெயலலிதாவின் காலில் விழுந்து வணங்கியுள்ளார்

---

முல்லையில்

மிரவு 8-30 மணியளவில் முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் இடம்பெற்றுள்ளது

முல்லைத்தீவு நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் வட்டுவாகல் பகுதியிலுள்ள நான்கு வீடுகளை எரித்துவிட்டு முன்னேறி வரும்போது புலிகள் எதிர்த்தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இத்தாக்குதலால் மேலும் முன்னேற முடியாத இராணுவத்தினர் முகாமுக்குப் பின்வாங்கிச் சென்றுள்ளதாக தெரியவருகிறது. இச்சம்பவத்தில் இராணுவத்தரப்பில் ஏற்பட்ட சேத விபரங்கள் கிடைக்கவில்லை.

---

கண்ணன்

வைத்துள்ளார். தான் இந்திய இராணுவத்தினரால் பலமாகத் தாக்கப்பட்டமையால் தனது உடல்நலம் கருதி விட்டிருந்து சேவையாற்ற அனுமதிக்கப்பட்டதாக கூறி பல்வேறு வழிகளிலும் பொதுமக்களின் உதவியைப் பெற்று வந்துள்ளார் இதன்மூலம் இணக்கமன்றிலும் ஊடுருவியிருந்தார்.

விடுதலையாகி வந்தவுடனேயே தமது பழைய சகபாடிகளைத் திரட்டி கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடத் தொடங்கிவிட்டார். இவரது இரு சகோதரர்களும் இவருடன் இணைந்து செயற்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் நேரடியாகவே கொள்ளையில் ஈடுபட்டார். அவர் இன்னும் கைதாகவில்லை. இவரது தாயாரே இவரது குழுவிற்கு ஆட்திரட்டும் முகவராகச் செயற்பட்டு வந்துள்ளார்,

கைதாகியுள்ளவர்களில் பத்துப்பேர் நேரடியாகவே கொள்ளைகளில் ஈடுபட்டவர்கள். ஏனையோர் பொருட்களை விற்றல், தகவல் தொடர்பு போன்றவற்றில் ஈடுபட்டவர்கள். ஏற்கனவே இவருடன் இணைந்து கொள்ளையில் ஈடுபட்டு தற்போது பயத்தின் காரணமாக செயற்படாதிருந்த சிலரை கண்ணன் துப்பாக்கியைக் காட்டி நாட்டை விட்டு வெளியேறும்படி மிரட்டியுள்ளார். 'நீங்கள் இருந்தால் பிடிபட்டால் பிறகு நாங்களும் பிடிபட வேண்டும்' என்பதே கண்ணனின் வாதம்.

இக்குழுவினர் கொள்ளையிடும்போது சீருடை தரித்துச் சென்றுள்ளனர். சோதனைக்கு வந்திருப்பதாகக் கூறி தனியறையில் வீட்டுக்காரரை விட்டுவிட்டு கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கண்ணனை இயக்கம் என்று நம்பிய ஒரு இளம் பெண்ணிடமே அவர் தனது பிஸ்டலைப் பாதுகாப்பாக வைத்திருக்கும்படி ஒப்படைத்திருந்தார்.

இவர்களால் கொள்ளையிடப்பட்ட நகைகள் பலவற்றை அவற்றின் சொந்தக்காரர்கள் அடையாளம் காட்டியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.